Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

பொது சன நூலகம் மாநகராட்சி மன்று 10-5-1993 யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 27 [10-05-93] திங்கட்கிழமை ஓசை 81

## ஓய்வூதியம் பெறுவோருக்கு 260 ரூபா மேலதிகபடி

வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் 260 ரூபாவை ஓய்வூதியம் பெறுவோருக்கும் வழங்குமாறு திறைசேரியை டி. பி. விஜயதுங்க பணித்துள்ளார். ஜூன் முதலாம் திகதி முதல் இது அமுலுக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் சுமார் 3 லட்சத்து 20ஆயிரம் ஓய்வூதியம் பெறுவோர் நன்மையடையவுள்ளனர். மேலதிக அலவன்ஸ் தொகையாக 200 ரூபாவும் 300 ரூபாவும் வழங்கப்படுவதனால் ஓய்வூதிய வேறுபாடுகளை நீக்குமாறு தான் திறைசேரிக்கு உத்தரவிடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். சம்பள நிலை உச்சவரம்பு நிலை காரணமாக இந்த அலவன்ஸ் தொகையைப் பெற்றுக்கொள்ள (4ஆம் பக்கம் பார்க்க)

### பூநகரிப் பாதை விவகாரம்

# புதிய ஜனாதிபதியுடன் ஐ.நா.அதிகாரிகள் பேசுவர்

(யாழ்ப்பாணம்)

பூநகரி – சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர்பாக, புதிய ஜனாதிபதி டி, பி. விஜயதுங்காவுடன் அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்புப் பிரதிநிதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக யாழ். அகதிகளுக்கான ஐ, நா. உயர்ஸ்தானிகராலய வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய கொழும்பு வதிவிடப் பிரதிநிதி டாக்டர். பீற்றர் நிக்கிலஸ் இது குறித்து விரைவில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும்,

அதைத்தொடர்ந்தே அவரது யாழ்ப்பாணப் பயணம் பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரியவருகின்றது.

பூநகரி - சங்குப்பிட்டிப் பாதை திறப்பது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் அகதிகளுக்கான ஐ நா. ஸ்தானிகராலய பிரதிநிதிகள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டதாகவும், பூநகரிப் பாதையை திறப்பதற்கு அரசாங்கம் கொள்கையளவில் உடன்பட்டிருந்தமையும் தெரிந்ததே.

## ஜே.ஆர். - விஜயதுங்க கண்டியில் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், புதிய ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவும் கண்டி ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பின்போது பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கஅதிகாரிகளும் கூட இருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புதிய ஜனாதிபதியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று கண்டி தலதாமாளிகைக்குச் சென்று புனித தந்தத்தைத் தரிசித்தனர்.

அத்துடன் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்கல்ல சிறிதம்மரட்சிக விபசிதேரோவையும் சந்தித்து ஆசிபெற்றனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய பலிப்பான சந்தானந்த தேரோவையும் சந்தித்தனர்.

கொழும்பு நகர்ப் பாதுகாப்பு;

## நிலைமையை அவதானித்தே படை வாபஸ் நடைபெறும்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டதை தொடர்ந்து கொழும்பில் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலைமையை அவதானித்தே நீக்கப்படும் என கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்தார். கொழும்பில் தொடர்ந்தும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், இராணுவத்தினரும் நிலைகொண்டுள்ளனர்.

இனிவரும் நாட்களில் நிலைமைகளின் முன்னேற்றத்தை அவதானித்தே விசேட பாதுகாப்பு நடவடிக்கை மீண்டும் அகற்றுவதுபற்றி ஆலோசிக்கப்படும் என்றும் பிரிகேடியர் அங்கமன மேலும் தெரிவித்தார்.

பிரேமதாசா கொலை விசாரணை

லலித், பிரேமதாசா கொலை

# கடற்படைத் தாக்குதலுக்கு மீனவர் படகு சேதம்

[வடமராட்சி]

வடமராட்சி கிழக்கு மணல்காடு கடற்பரப்பில் வைத்து ஏவப்பட்ட சிறிலங்கா கடற்படையினரின் ஷெல் தாக்குதலுக்கு படகொன்று சேதமடைந்தது இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.

மணல்காடு கடற்பரப்பில் ரோந்து சென்ற கடற்படையினர் பலத்த தாக்குதல்களை புரிந்ததில் இதற்கு இலக்காக படகொன்று பலத்த சேதமடைந்தது. மேலும் சில படகுகள் சேதமடைந்திருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

கடலில் காணப்பட்ட மீனவர்கள்மீது கடற்படையினர் கண்மூடித்தனமான முறையில் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதில் பல மீனவர்கள் தமது பொருள்களை இழந்த நிலையிலும் கரையை வந்தடைந்தனர்.

முனையைச் சேர்ந்த திரு. பொன்சாசா என்பவரது படகே பலத்த சேதமடைந்தது. இந்த மீனவரே மயிரிழையில் உயிர் பிழைத்தவராவார்.

மற்றும் வடமராட்சி வடக்கு-கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினரின் பாரிய கப்பலுடன் விசைப் படகுகளும் இணைந்து நேற்றுமுன்தினமும் நேற்றும்ரோந்துசென்றன. கட்டைக்காடு-பலாலிக்கும் இடையில் ஒரே தடவையில் மூன்று படகுகள் கூட்டாக ரோந்து சென்றதையும் அவதானிக்க முடிந்தது.

வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு பகுதியில் சிறிலங்கா கடற்படைக்கு சொந்தமான பாரிய கப்பல் ஒன்று ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## மீட்பு நிதி சேகரிப்பு

எதிர்வரும் புதன்கிழமை அன்றுநல்லூர்மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக் குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதி பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கொலை குற்றவாளிகளுக்கு நேற்று மரணதண்டனை

கடந்த வருடம் ஜனவரி மாதம்6ஆம்திகதி தாவடியைச் சேர்ந்த நவரட்ணராஜா சுதர்சன் என்பவரை கொலை செய்தமை தொடர்பாக கொலைக் குற்றம் சாட்டப்பட்ட நடராசா தயானந்தன், சிவகுருநாதன் குகநேசன் ஆகிய இருவருக்கும் நேற்று மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

தாவடிச் சந்தியில் வைத்து சிவகுருநாதன்குகநேசனுக்கும், கோண்டாவில் சந்தியில் வைத்து நடராசா தயானந்தனுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது.

# லலித்தை கொன்றவர்களே பிரேமாவைக் கொன்றார்கள்

## வினிஎத்திகொட தெரிவிப்பு

முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியைக் கொன்ற அதே கொலைக் கும்பலே ஜனாதிபதி பிரேமதாசாவையும் கொன்றிருக்க வேண்டும் என லக்தீவ பத்திரிகை ஆசிரியர் வீ னி

எத்திகொட பி.பி ஸி க்கு தெரிவித்தார். விசாரணைகள் மூலம் தாம் பிடிபட்டுவிடலாம் என அஞ்சியே அவர்கள் இதனைச் செய்திருக்க வேண்டும்

ரிகைகள் விடுதலைப் புலிகள் தான் இதனைக் செய்தனர் என கூறிவருகின்றனர். வேறு சந்தர்ப்பங்கள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என

# ஜே.ஆர். - விஜயதுங்க கண்டியில் சந்திப்பு

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், புதிய ஜனாதிபதி டி. பி.விஜயதுங்காவும் கண்டி ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பின்போது பல பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கஅதிகாரிகளும் கூடஇருந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புதிய ஜனாதிபதியும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று கண்டி தலதாமாளிகைக்குச் சென்று புனித தந்தத்தைத் தரிசித்தனர்.

அத்துடன் மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய ரம்புக்கல்ல சிறிதம்மரட்சிக விபசிதேரோவையும் சந்தித்து ஆசிபெற்றனர்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் அதி சங்கைக்குரிய பலிப்பான சந்தானந்த தேரோவையும் சந்தித்தனர்.

பிரேமதாசா கொலை விசாரணை

## சந்தேகநபர் கடையிலிருந்து கடிதங்கள் பல மீட்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனக்கருதப்படுபவர் பணிபுரிந்த கடையிலிருந்து அவருக்கு சொந்தமான பல ஆவணங்களை மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இவற்றில் தமிழில் எழுதப்பட்ட கடிதங்களும் உளளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இக்கடிதங்கள் கொலைக்கான துப்பை கண்டறிய உதவக் கூடும் என அவர்கள் நம்பிக்கை தெரிவித்தனர். இவற்றுடன் சந்தேக நபர் அண்மையில் தெகிவளை மிருகக்காட்சி சாலையில் எடுத்த புகைப்படங்களும் பெரும்தொகையான பணமும் அங்கிருந்து எடுக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தாம் பணியாற்றிய கடையில் நன்நடத்தையாக நடந்துகொண்டு அயலவர்களின் நற்பெயரை சம்பாதித்துக் கொண்டிருந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## பிரேமதாசாவின் கொலை ஓர் உள்வீட்டு வேலை

எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு

ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை ஓர் உள்வீட்டு வேலையாகும் என்று எதிரணியினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் கிளர்ச்சியாளர்களை புலனாய்வு செய்யும் பொலிசார் ஒரு போலியான துப்பில் செயல்படுகிறார்கள் என சுதந்திரக்கட்சி உட்பட பல இடதுசாரி அமைப்புகள் உள்ளடங்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் ஜயரத்ன தெரிவித்தார்.

இதில் புலனாய்வுக்கு பொறுப்பாக இருப்பவர்கள் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும் என நாம் நம்புகின்றோம். ஓர் உள்வீட்டு வேலைபற்றி பொலிசார் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் சந்தேகிக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளை விசாரிக்கவேண்டும் என நாம் விரும்புகிறோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இனவாத அரசியலின் உச்சத்தில் உள்ளோம்

– மகிந்த ராஜபக்ச

இனவாத அரசியலின் உச்சத்தை நாம் அடைந்து விட்டோம் என்பதில் சந்தேகமில்லை. ஐ. தே. க ஆட்சியின் 15 வருட காலத்தில் பல உயிர்கள் விழுங்கப்பட்டுவிட்டன என அம்பாந்தோட்டை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி. மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இந்த ஐ. தே. க. ஆட்சிக் காலத்தின் போது வடக்கு கிழக்கு யுத்தத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களின் மரணத்தை ஊமை உணர்ச்சியுடன் பார்த்து வருகிறோம். ஜெனரல் கொப்பேகடுவ, மற்றும் விமலரட்ன ஆகிய அதிகாரிகளுக்காக கண்ணீர் விட்டோம். லலித்தின் மரணத்தால் அதிர்ச்சியடைந்தோம்.

ஒன்ரரை தசாப்த ஐ. தே. க. ஆட்சி இப்போது அதன் தலைவரையே பழிவாங்கிவிட்டது என்றும் மகிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார்.

பாக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் அகதிகளுக்கான ஐ நா. ஸ்தானிக திறப்பதற்கு அரசாங்கம் கொள்கையளவில் உடன்பட்டிருந்தமையும் தெரிந்ததே.

கொழும்பு நகர்ப் பாதுகாப்பு;

## நிலைமையை அவதானித்தே படை வாபஸ் நடைபெறும்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா கொல்லப்பட்டதை தொடர்ந்து கொழும்பில் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் நிலைமையை அவதானித்தே நீக்கப்படும் என கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன தெரிவித்தார். கொழும்பில் தொடர்ந்தும் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், இராணுவத்தினரும் நிலைகொண்டுள்ளனர்.

இனிவரும் நாட்களில் நிலைமைகளின் முன்னேற்றத்தை அவதானித்தே விசேட பாதுகாப்பு நடவடிக்கை மீண்டும் அகற்றுவதுபற்றி ஆலோசிக்கப்படும் என்றும் பிரிகேடியர் அங்கமன மேலும் தெரிவித்தார்.

லலித், பிரேமதாசா கொலை

# தமிழ் இளைஞர் புரிந்ததாக பொலிசார் குற்றச்சாட்டு

## புலிகள் தொடர்புபற்றி ஆராய்வு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை கொலை செய்தவர்களை அடையாளம் கண்டுவிட்டதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவு அறிவித்துள்ளது.

குலவீரசிங்கம் வீரகுமார் (வயது 25) என்பவரே பிரேமாவைக் கொலை செய்தவர் என்றும், இவர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர் என்றும் லலித் அத்துலத்முதலியைக் கொலைசெய்தவர் கந்தையா ரகுநாதன் என்பவர் என்றும் இவரும் யாழ்ப்பாணம் சாவகச்சேரியைச் சேர்ந்தவரே என்றும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவு லயனல் குணதிலக தெரிவித்தார்.

லலித்தையும் பிரேமாவையும் கொலை செய்தவர்கள் தமிழர்கள் என்ற போதிலும் போராளி அமைப்பைச் சார்ந்தவர்களா என்பதை தாம் தொடர்ந்தும் ஆராய்வதாக பொலிஸ் கூறியுள்ளது.

## பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் நியமனமில்லை

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் புதிய அமைச்சரவையில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக எவரும் நியமிக்கப்படவில்லை. விஜயதுங்காவின் அமைச்சரவையில் 26 இராஜாங்க அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது,

இதே சமயம் ஜனாதிபதி என்ற வகையில் விஜயதுங்கா பாதுகாப்பு அமைச்சராக

(4ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை முன் புலிகளை குற்றம் சாட்டமுடியாது

பிரேமாவின் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்பதை ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க மறுத்துள்ளார் விசாரணை முடியமுன்னர் கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று எவ்வாறு கூறுவது எனஅவர்கேள்விஎழுப்பினார்.

முகலன் வீதி வாலிபர் சடலம்;

# வீட்டில் இருந்தவரை கடத்திச்சென்று கொன்றனர்

## லக்திவ ஆசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

லலித் அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக முகலன் வீதியில் இறந்து கிடந்த இளைஞன் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிநாடு செல்லவந்த அப்பாவி இளைஞன் என ''லக்திவ'' பத்திரிகயாளர் வினிஎக்தி கொடை தெரிவித்தார்.

இவ் இளைஞனின் வீட்டிற்கு வந்த ஒரு குழுவினால் இவர் கடத்தி செல்லப்பட்டார் என்றும் இக்குழுவில் பொலிஸ் உடையணிந்த சிலரும் சிவில் உடையணிந்தவர்களும் காணப்பட்டதாக கூறப்படுகின்றது.

இவர் வெளிநாட்டுக்கு குடும்பத்துடன் செல்லவந்திருந்தார்

(4ஆம் பக்கம் பார்க்க)

குறித்த நாளில் தமது மீட்பு நிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்பு நிதி பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

சன் என்பவரை கொலை செய்தமை தொடர்பாக கொலைக் குற்றம் சாட்டப்பட்ட நடராசா தயானந்தன், சிவகுருநாதன் குகநேசன் ஆகிய இரு சிவகுருநாதன்குகநேசனுக்கும், கோண்டாவில் சந்தியில் வைத்து நடராசா தயானந்தனுக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது.

# லலித்தை கொன்றவர்களே பிரேமாவைக் கொன்றார்கள்

## வினிஎத்திகொட தெரிவிப்பு

முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலியைக் கொன்ற அதே கொலைக் கும்பலே ஜனாதிபதி பிரேமதாசாவையும் கொன்றிருக்க வேண்டும் என லக்திவ பத்திரிகை ஆசிரியர் வினி எத்திகொட பி. பி. ஸி க்கு தெரிவித்தார். விசாரணைகள் மூலம் தாம் பிடிபட்டுவிடலாம் என அஞ்சியே அவர்கள் இதனைச் செய்திருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும் அரசாங்கப் பத்திரிகைகள் விடுதலைப் புலிகள் தான் இதனைச் செய்தனர் என கூறிவருகின்றனர். வேறு சந்தர்ப்பங்கள் குறித்தும் ஆராயப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் கொலைச்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

ஸ்கொட்லன்ட்யார்ட் நடாத்திய

## விசாரணை அறிக்கை 3வாரத்தில் வெளியிடப்படும்

[கொழும்பு]

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும், திரு. லலித் அத்துலத்முதலியும் படுகொலை செய்யப்பட்டமை குறித்த புலன் விசாரணை அறிக்கையை மூன்று வாரத்தில் ஸ்கொட்லன்ட்யார்ட் புலன் விசாரணைக் குழுவினர் வெளியிடவுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. இக் குழுவினர் கொழும்பில் தங்கியிருந்து புலன் விசாரணைகளை முடித்துக் கொண்டு ஏற்கனவே நாடு திரும்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்கொழும்பு பொலிஸ்

## தருப்பு காவலிலிருந்து தமிழ் இளைஞன் ஓட்டம்

(கொழும்பு)

நீர்கொழும்பு பொலிஸ் நிலைய தடுப்பு காவலிலிருந்து தப்பிவிட்ட யாழ் இளைஞரை பொலிசார் தேடிவருகின்றனர். கரவெட்டியைச் சேர்ந்த சிவக்கொழுந்து அழகன் என்ற இவர் அண்மையில் நீர்கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

## உலர் உணவு விநியோகம் வழங்குவதில் தாமதம்

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்து முகாம்களிலும் ஏனைய பிற இடங்களிலும் வசிக்கும் தீவக மக்களுக்கு சித்திரை மாதத்திற்கான நான்கு கட்ட இலவச உலர் உணவு நிவாரணமும், வைகாசி மாதத்திற்கான முதல் இரண்டு கட்ட நிவாரண விநியோகமும் இதுவரைவழங்கப்படவில்லை.

இவ் உலர் உணவு நிவாரண விநியோகத்தில் உள்ள தாமதத்தால் இடம்பெயர்ந்த மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கி பெரிதும் கஷ்டப்படுகின்றனர். இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் துரித நடவடிக்கைமேற்கொள்வதன்மூலம் உடன் நிவாரணப் பொருள்களைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டுமென இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் தனது அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## படகு சேவை

கலந்துரையாடல்

கிளாலி-பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள் அனைவரையும் இன்று திங்கட்கிழமை பி.ப. 2-00 மணிக்கு கிளாலிப் படகுத்துறைக்கு வருகை தருமாறு யாழ். மாவட்ட வருவாய் பொறுப்பாளர் வேண்டியுள்ளார்.

## எறிகணைத் தாக்குதல்

கிளாலிக் கடல் கரையை நோக்கிஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வரி விளம்பரம்


### ஜாம் போத்தல் தேவை

வெற்று ஜாம் போத்தல்கள் கூடிய விலைக்கு கொள்வனவு செய்யப்படும். தொடர்பு:- வேலவன் ஸ்ரோஸ் (நல்லூர் கோவில் முன்பாக) பருத்தித்துறை வீதி, நல்லூர். (4837)

### பழைய பொருள்கள் உத்தரவாதத்துடன்

பல ஆண்டுகளுக்குமுன் உருவாக்கப்பட்ட சுவர் மணிக்கூடுகள், நவநாகரிக பாவனைக்கு வந்துள்ளமையால், உங்கள் பழைய சுவர்மணிக்கூடுகள் யாவும் அனுபவசாலியின் மூலம் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படுகிறது வாரத்திற்கு இரு மணிக்கூடுகள் மட்டும் திருத்தப்படும். டில்கா வாச் அன்ட் ரேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி 6542)

### முன்னோடி நூல்கள்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 'பெட்டிக்காரர்கள்' "முதலாம்பிள்ளை" ரூ 30/- நூல்கள் முறையே இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளாகும் இந்த 19 நாடகங்களையும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (4799)

### Your Watches or Radios?

Repairs of Watc es&Radios Guaranteed DILKA WATCH& RADIO ORKS, 284 S anley Road, Ariyakulam Junction, Jaffna. Branch: Kandy Road, Chavakachcheri. (சி-6541)


### கலந்துரையாடல்

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கமும், வடபிராந்திய சுருட்டு தொழிலாளர் சங்கமும் இணைந்து நடத்திய கலந்துரையாடல் வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்க பணிமனையில் நடைபெற்றது


வாடிக்கையாளருக்கு

**அறிவித்தல்**

ஜே. எகட்டன்

ஜெசித்தாராவின்

உணவுப் பார்சல்கள் தாமதமின்றி உடனடியாகக் கிடைக்கும்.


# படை அதிகாரிகளை நம்பி அரசுபோரை தீவிரமாக்கலாம்

## 'வெரித்தாஸ்' கணிப்பீடு

இலங்கையில் அரசியல் தலைமைக்கு ஏற்படும் போட்டிகளிலும், உள் கட்சிப் பூசல்களிலும் தமிழர் பிரச்சினை மறக்கடிக்கப்படலாம், அல்லது புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சும் சிங்கள அரசியல்வாதிகள் வட-கிழக்குப் போரைத் தீவிரமாக்கலாம்- என்று வெரித்தாஸ் வானொலி கருத்துத் தெரிவித்திருக்கிறது.

அரசு இராணுவத்துக்குச் செலவிடும் தொகையையும், இராணுவவீரர்களையும் அதிகரித்தால் தாம் புலிகளை வெல்வது உறுதி என்று கூறி வரும் இராணுவ அதிகாரிகளின் பேச்சை நம்பி, அரசியல்வாதிகள் போர் நிதியை அதிகரிக்கக்கூடும். அது போரைத்தான் தீவிரப்படுத்துமே தவிர, பிரச்சினையைத் தீர்க்க உதவாமல் போர் நீண்டுகொண்டே போகும் அபாயம் ஏற்படக்கூடும் என்றும்-

தமிழர் பிரச்சினைக்கு நீதியான தீர்வைக் கொடுப்பதன் மூலம் சிங்கள மக்களிடம் தமது செல்வாக்கை இழக்கத் தயாராக இருக்காதநிலையில் இருந்துவந்த பிரேமதாசா, லலித் அத்துலத்முதலி ஆகியோரின் மறைவினால் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தவேண்டும் எனப் பிற அரசியல் வாதிகளின் தீவிரம் அதிகரிக்கக் கூடும் என்றும் வெரித்தாஸ் தெரிவிக்கின்றது. இத்தகைய நிலைமைக்கு வாய்ப்புக் குறைவு என்றும் வெரித்தாஸ் அச்சம் தெரிவிக்கின்றது.

இலங்கை சந்திக்க இருக்கும் தலைமைகள் உறுதியான தலைமையாக இருக்குமா என்ற முடிவு எடுக்க உறுதி கொண்டதா என்பதெல்லாம் சந்தேகமே. உறுதியான தலைமை இருந்தால் மட்டுமே உறுதியான தீர்வையும் எதிர் பார்க்கமுடியும். இனப் பிரச்சினைக்கு புதிய உறுதியான தலைமை இலங்கையில் ஏற்படும் வரை தமிழர் பிரச்சினையை விட்டுவிடும் நிலை கூட ஏற்படலாம் -இவ்வாறு வெரித்தாஸ் வானொலி மேலும் தெரிவிக்கின்றது.

### 500 கைதிகள் விடுதலை

புதிய ஜனாதிபதியாக டி. பி விஜயதுங்கா தெரிவானதை யொட்டி 500 சிறைக்கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் தூக்குத்தண்டனை பெற்றவர்களுக்கு அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டுள்ளது.

## றிச்சார்ட் டி சொய்சா கொலை;

# குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரியும் பலி

(கொழும்பு)

கொழும்பு ஆமர் வீதிச்சந்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் றிச்சார்ட் டி சொய்சா கொலையில் சம்பந்தப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரொனி குணசிங்காவும் கொல்லப்பட்டார்.

இதன் காரணமாக இவர், டாக்டர் (திருமதி) மனோராணி சரவணமுத்துவுக்கு எதிராகத் தொடர்ந்திருந்த 10 லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழக்கை வாபஸ்பெற நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திங்களன்று இந்த வழக்கு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ச. நாணயக்காரா முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் இவ்வாறு உத்தரவு பிறப்பித்தார்.

பிரதிப்பொலிஸ் மா அதிபர் கொல்லப்பட்டதை அவர் தரப்பு வழக்கறிஞர் உத்தியோக பூர்வமாக நீதிமன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

தனது மகன் றிச்சார்ட் டி சொய்சாவைக் கடத்திச்செல்ல பிரதிப் பொலிஸ் மா அதிபர் ... செய்து தனக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தினார் என்றே பிரதிப் பொலிஸ் மா அதிபர் நஷ்ட ஈட்டு வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

பத்திரிகையாளர் றிச்சார்ட் டி சொய்சா அவர் வீட்டிலிருந்து கடத்தப்பட்டு மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.


### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நாட் குறிப்புப் புத்தகம் ஒன்றும் ஒரு தொகைப் பணமும், வவுனியா மாவட்டத்தில் கடமைபுரியும் அலுவலர்களுக்கான அனுமதி அட்டை ஒன்றும் கொடிகாமம் பிரதான வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.


### கடமைக்கு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டுக்காக திருக்கோணமலை. மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து கப்ப...

# தான் உருவாக்கிய சக்திக்கு பிரேமதாசா பலியானார்

## நவசமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா உருவாக்கிய அரசியல், பொருளாதார மற்றும் சமூக சக்திகளுக்கே அவர் இரையானார். அரசியலைக் குரூரமாக்கியதும், பயங்கரத்தைப் பரவலாக்கியதும் அவரது ஆட்சியின் உச்சிப் புள்ளிகள் என்று நவசமசமாஜக் கட்சி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்களுக்கிடையில் கோஷ்டிச் சண்டைகள், கடத்தல் காரர், சர்வதேசக் கைக் கூலிகள் ஆகியன பிரேமதாசா ஆட்சியில் சர்வ சாதாரணம். கொலைகளும், காணாமற் போவதும் வழக்கமான நிகழ்ச்சிகள்.

இறுதியாக, ஜனாதிபதி பிரேமதாசா கட்டவிழ்த்து விட்ட சக்திகளே அவரது உயிருக்கு உலைவைத்து விட்டன. இவ்வாறு நவசமசமாஜக் கட்சி தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது

வடக்கு, கிழக்கு யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்குமாறும் அரசியல்கைதிகளை விடுதலை செய்யுமாறும், அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும், தனியார் மயமாக்கதலைக் கைவிடும்படியும் அந்த அறிக்கையில் கோரப்பட்டுள்ளன.

### லண்டன் திரும்பினர்

லலித் கொலை தொடர்பான புலன் விசாரணைகளில் உதவுவதற்காக கொழும்பு வந்திருந்த ஸ்கொட்லன்டயார்ட் குழுவினர் தமது பணிகளை முடித்துக் கொண்டு லண்டனுக்கு திரும்பிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பிரேமதாசா கொலை விசாரணையிலும் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே.


புகையிலைஉற்பத்திபதப்படுத்தலாளருக்கு

**ஓர் நற்செய்தி**

**வாங்கிருவீர் பனம் பாணி**

புகையிலை பதப்படுத்தலுக்குரிய பனம் பாணி நியாய விலைக்கு முன் கூட்டிய ஓடருக்கு விநியோகம் செய்யப்படும்.

★ 30 விகித செறிவு பனம் பாணி
1 போத்தல் விலை ரூபா 35.00

தேவையானவர்கள் தொடர்பு கொள்ளவும்

பொது முகாமையாளர்
அரியாலை தெ.ப.பொ. உ. வி-கூ. சங்கம்
15, நடுத்தெரு லேன்
கண்டிவீதி,
அரியாலை.

(சி/6589)

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்
★ குறைந்த கூலி ★ நிறைந்த சேவை
இவற்றின் மையம்

**நியூ குமரன் கிறைண்டிங் மில்**

நவாலி


(நவாலி மகாவித்தியாலயம் முன்பாக அமைந்துள்ளது)

மக்கள் சேவையில் ஐந்து வருடத்தை பூர்த்தி செய்து தொடர்ந்தும் உங்கள் சேவையை நிறைவு செய்வது எமது பணியாகும்.

இவ்வேளையில் மேலும், இவ் எரிபொருள் உயர்விலும் குறைந்த கூலியில் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்

எமது ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு 9 5-1993 தொடக்கம் இப் புதிய குறைந்த கட்டணத்தில் எமது ...


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பத்மினி பாலச்சந்திரன்**

அச்சுவேலி

தோற்றம்: 15-01-1953 மறைவு: 15-04-1989

அன்பின் உறைவிடமே
இல்லத்தின் தலைவியே
பாசத்தின் சிகரமே
வருடம் நான்கு உருண்டதம்மா
எம் இதயங்களில் என்றுமே
நீ வாழ்கின்றாய் அம்மா

பிரிவால் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.

(சி/6601)

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-10

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் காவல் நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

சபேசன் (சோமசுந்தரம் சிறிக்குமார்- அரசடி, கொக்கு...

ion, Jaffna Branch; Kandy Road, Chavakachcheri.

(சி-6541)

### கலந்துரையாடல்

வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்கமும், வடபிராந்திய சுருட்டு தொழிலாளர் சங்கமும் இணைந்து நடத்திய கலந்துரையாடல் வடமாநில சுருட்டு தயாரிப்பாளர் சங்க பணிமனையில் நடைபெற்றது

வாடிக்கையாளருக்கு

## அறிவித்தல்

ஜோ. எகட்டன்

**ஜெசித்தாராவின்**

உணவுப் பார்சல்கள் தாமதமின்றி உடனடியாகக் கிடைக்கும்.

பகல் 11-30 மணிமுதல் 3-30 மணிவரை எல்லா உணவு வகை ஓடர்களும் துரித கதியில் கவனிக்கப்படும்.

**ஜோ. எகட்டனின்**

**ஜெசித்தாரா உணவகம்**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) சுண்டுக்குளி.

(சி-6569)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் உபயோகிப்பதற்கு 5 kvaக்கு மேற்பட்ட வலுவுள்ள தனி அவத்தை/மூன்று அவத்தை (Phase) மின் பிறப்பாக்கிகள் வாடகைக்கு தேவைப்படுகின்றன.

வைத்திருப்போர் 1993-05-11 பிற்பகல் 2-00 மணிக்கு பல்கலைக்கழக துணைவேந்தருடன் தொடர்பு கொள்ளவும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
த.பெ.இல 57,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.

(சி 6568)

இதன் காரணமாக இவர், டாக்டர் (திருமதி) மனோராணி சரவணமுத்துவுக்கு எதிராகத் தொடர்ந்திருந்த 10 லட்சம் ரூபா நஷ்ட ஈடு வழக்கை வாபஸ்பெற நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

திங்களன்று இந்த வழக்கு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிபதி ச. நாணயக்காரா முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர் இவ்வாறு உத்தரவு பிறப்பித்தார்.

பிரதிப்பொலிஸ் மா அதிபர் கொல்லப்பட்டதை அவர் தரப்பு வழக்கறிஞர் உத்தியோக பூர்வமாக நீதிமன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

தனது மகன் றிச்சார்ட் டி சொய்சாவைக் கடத்திச்செல்ல பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொனி குணசிங்கா திட்டம் தீட்டினார் என்றும், இதனை உறுதிப்படுத்தும் வகையில் மனோராணி சரவணமுத்து சத்தியக்கடதாசிகளைத் தாக்கல் செய்து வாக்குமூலம் கொடுத்தார். தகுந்த சாட்சியங்கள் இல்லாமல் கேள்விப் பட்டதைக் கொண்டே மனோராணி சரவணமுத்து சத்தியக் கடதாசிகளைத் தாக்கல் செய்யப்பட்டது தெரிந்ததே.

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

நாட் குறிப்புப் புத்தகம் ஒன்றும் ஒரு தொகைப் பணமும், வவுனியா மாவட்டத்தில் கடமைபுரியும் அலுவலர்களுக்கான அனுமதி அட்டை ஒன்றும் கொடிகாமம் பிரதான வீதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

### கடமைக்கு திரும்பவில்லை

(யாழ்ப்பாணம்)

சித்திரைப் புத்தாண்டுக்காக திருக்கோணமலை. மட்டக்களப்பு பகுதிகளிலிருந்து கப்பலில் வடபகுதி வந்த 200க்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் இன்னும் கடமைக்குத் திரும்பவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது

வடக்கு-கிழக்கு மாகாண சபை அலுவலகத்திலும், பல்வேறு திணைக்களங்களிலும் கடமையாற்றும் ஊழியர்கள் திருமலையிலிருந்து கப்பலில் புத்தாண்டுக்காக வீடுகளுக்கு வந்திருந்தனர்.

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வன்

## சிவகுருநாதன் சிவசங்கர்

தண்ணீரூற்று - முள்ளியவளையைச் சேர்ந்த சிவகுருநாதன் இதயராதா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிவசங்கர் தனது மூன்றாவது பிறந்த நாளை 10-05-93 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்..

இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அம்மப்பா, ரதன் மாமா, ராஜா சித்தப்பா, பாட்டி மற்றும் உறவினர்கள், நண்பர்கள் பல்கலையும் கற்று நோய்நொடியின்றி பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்

(4843)

அரியாலை தெ.ப.பொ. உ.வி-கூ. சங்கம்
15, நடுத்தெரு லேன்
கண்டிவீதி,
அரியாலை.

(சி/6589)

★ நம்பிக்கை ★ நாணயம் ★ உத்தரவாதம்
★ குறைந்த கூலி ★ நிறைந்த சேவை
இவற்றின் மையம்

## நியூ குமரன் கிறைன்டிங்மில்

நவாலி

(நவாலி மகாவித்தியாலயம் முன்பாக அமைந்துள்ளது)

மக்கள் சேவையில் ஐந்து வருடத்தை பூர்த்தி செய்து தொடர்ந்தும் உங்கள் சேவையை நிறைவு செய்வது எமது பணியாகும்.

இவ்வேளையில் மேலும், இவ் எரிபொருள் உயர்விலும் குறைந்த கூலியில் பூர்த்தி செய்து கொள்ளுங்கள்

எமது ஐந்தாண்டு பூர்த்தியை முன்னிட்டு 9 5-1993 தொடக்கம் இப் புதிய குறைந்த கட்டணத்தில் எமது சேவையை ஆரம்பித்துள்ளோம்

- நெல் 1 கிலோ உடைத்துத் தீட்ட 1 ரூபா
- மிளகாய் 1 கிலோ 20 ரூபா
- மா 1 கிலோ 5 ரூபா

மொத்தமாக கொண்டுவருபவர்களுக்குவிசேடசலுகை

உங்கள் சேவையே எங்கள திருப்தி.

## நியூகுமரன் கிறைன்டிங்மில்

நவாலி - அரசடி (சி/6597)

இந்துமத குருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்

## வருடாந்த பொதுக்கூட்டம்

**திகதி:** 10-5-93 திங்கட்கிழமை (இன்று)
தமிழ் சித்திரை 27-ம் நாள்

**நேரம்:** பி. ப 2 மணி

**இடம்:** யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

**தலைவர்:** சிவஸ்ரீ கை. வாமதேவக்குருக்கள்

### நிகழ்ச்சி நிரல்

1. இறை வணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. சிறப்பு உரைகள்
6. புதிய நிர்வாகசபை தெரிவு
7. கலந்து உரையாடல்.

இந்துமத குருமார் ஒன்றிய வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

சிவஸ்ரீ கை. வாமதேவக் குருக்கள்
தலைவர்

சிவஸ்ரீ. வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்
பொதுச் செயலாளர்

சிவஸ்ரீ கி. நாராயணக்குருக்கள்
பொருளாளர்

இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

(சி-6599)

அன்பின் உறைவிடமே
இல்லத்தின் தலைவியே
பாசத்தின் சிகரமே
வருடம் நான்கு உருண்டதம்மா
எம் இதயங்களில் என்றுமே
நீ வாழ்கின்றாய் அம்மா

பிரிவால் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள்,
உறவினர்கள்.

(சி/6601)

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-10

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் காவல் நிலையத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய

சபேசன் (சோமசுந்தரம் சிறிக்குமார்-அரசடி, கொக்குவில் மேற்கு-யாழ்)

1986ஆம் ஆண்டு யாழ்-அளவெட்டிப் பயிற்சி முகாமில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

★ பி. புனிதவதி (மலையகம்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்டு மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய

★ கிங்ஸ்லி/சவுரி (இராசதுரை-முருங்கன்-மன்னார்)

★ சகாயம்/கோபி (சந்தியோகு-முருங்கன்-மன்னார்)

1988ஆம் ஆண்டு யாழ்-பருத்தித்துறை திக்கம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

கப்டன் ரவாஸ் (செல்வன் ஈஸ்வரஜீவா-புத்தூர் கிழக்கு-யாழ்)

இதே சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டு வீரச்சாவெய்திய-

லெப்.வெங்கடேஸ் (சண்முகசுந்தரம் ஜீவகரன்-இன்பருட்டி, அல்வாய்வடக்கு-பருத்தித்துறை-யாழ்)

வவுனியாவிலிருந்து திருமலையை நோக்கிச் சென்ற சிற்றூர்தி ஒன்றின்மீது, கெப்பிட்டி கொல்லாவைப் பகுதியில் வைத்து கறுப்புச்சட்டைக்காரர்கள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தை மற்றும் இளம்பெண்.

1989ஆம் ஆண்டு யாழ்-லைடன் சந்தியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

சபா/திலீபன் (கறுப்பையா சந்திரன்-234/2செபஸ்ரியான் வீதி, ஓட்டுமடம்-யாழ்)

யாழ்ப்பாணத்தில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்-பரியோவான் கல்லூரி மாணவன்

1991ஆம் ஆண்டு அம்பாறை-தம்பிலுவில் களப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

பவான் (மார்கண்டு ராஜா-தம்பிலுவில்-அம்பாறை)

ஆனந் (நாகராசா நந்தகுமார்-தம்பிலுவில்-அம்பாறை)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்ட களுவங்கேணி-01 ஐச்சேர்ந்த தமிழ் கடற்றொழிலாளி,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/6596)

சிந்தனைக்கு

பெரும்பாலான மனிதர்க்கு அனுபவம், கடந்துவிட்ட பாதைமேல் ஒளி வீசும் கப்பலின் பின்புறவிளக்குகள் போலத்தான்.

-சேம்யல் கா லெரிட்ஜ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 10-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## புதிய தலைமையினால் மாற்றமுடியாது

சிறிலங்காவின் புதிய தலைமையின் இனப்பிரச்சினை குறித்த அணுகுமுறை பற்றி அரசியல் விமர்சகர்களால் பலகருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. புதிய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் குணநலவடிவங்களையும் அவரது கடந்தகால அரசியல் நடவடிக்கைகளையும் அவதானித்ததன் அடிப்படையில் இக் கருத்துக்கள் உருவாகியுள்ளன.

இவ்வாறு கருத்துக்கூறியுள்ள அரசியல் விமர்சகர்கள் சிலர் டி பி. விஜயதுங்காவை ஒரு கடும் கோட்பாட்டாளர் எனவும், வேறு சிலர் அவர் தீர்மானம் எடுக்கமுடியாத கைப்பாவையாகச் செயற்படக்கூடிய ஒரு ஜனாதிபதி என்றும், மற்றவர்களின் அழுத்தங்களுக்கு உட்படுவார் எனவும், வேறு சிலர் அவர் ஒரு சகிப்புத் தன்மையுடைய தலைவர் எனவும் குறிப்பிடுகின்றனர். இவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவரும் இனப் பிரச்சினைகுறித்து டி.பி.விஜயதுங்காவின் அணுகுமுறை எப்படி இருக்கும் எனவும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

ஆனால், திரு. டி. பி. விஜயதுங்காவோ முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளே கடைப்பிடிக்கப்படும் என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டார். இனப்பிரச்சினை குறித்தும் அவரது அறிவிப்புக்கள் அவ்வாறே உள்ளன.

இந்நிலையில் இனப்பிரச்சினையில் டி.பி.விஜயதுங்காவின் அணுகுமுறை இராணுவத்தீர்வை அண்டியதாகவே இருக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் இன்றைய வளர்ச்சி நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதே முடிவாகவுள்ளது.

அரசியல் விமர்சகர்கள் பலரும், கொழும்பில் தங்கியிருந்த தமிழ்க்குழுக்கள் பலவும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணக்கூடிய சக்தி பொருந்தியவர் எனக் கடந்தகாலத்தில் தெரிவித்தனர். ஆனால், அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வில் அதாவது இராணுவ அணுகுமுறையில் இருந்து விலகி அரசியல் அணுகுமுறையில் ஒரு படிதானும் முன்னேற முடியவில்லை.

# சிறிலங்காவில் அடுத்தது என்ன?

இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி டி.பி. விஜயதுங்காவை அறிந்தவர்கள் அவர் கோபத்தை தீர்க்கும் பண்புடையவர் அல்லர் என்பதை அறிவார்கள். இதனால் தான் ஆளும் ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை அதிபர் பதவிக்கு தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்று எண்ணத் தோன்றுகிறது. 1989-ல் அதிபர் பிரேமதாசா அவரைப் பிரதமராக நியமித்த போது ஓரளவு வியப்பு தெரிவித்தார் விஜயதுங்க என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம் தான். அந்தப் பதவிக்கே அப்படி என்றால் அப்படிப்பட்டவர் கனவில் கூட நாட்டின் தலைமைப் பதவிக்கு உயர்த்தப்படுவோம் எனக் கருதியிருக்க மாட்டார், ஏன், விரும்பிக் கூட இருக்க மாட்டார் என்றே கூறலாம்.

ஒரு தலைவர் என்ற வகையில் வலிமை குறைந்தவர் வளைந்து கொடுப்பவர் என்றெல்லாம் விஜயதுங்க சாதாரணமாக கருதப்பட்டு வந்துள்ளார். அப்படிப்பட்டவர்இன்று இலங்கையின் அரசியலமைப்பு சட்டப்படி அளப்பெரும் அதிகாரங்கள் கொண்ட அதிபர் பதவியிலேயே அமர்ந்து இருக்கின்றார். இதனால் முரண் நகைச்சுவையாக ஒன்று நிகழக் கூடும். விஜயதுங்காவே உறுதியான தலைவராக மாறிவிடக் கூடும் அல்லவா? இப்படியும் பல பார்வையாளர்கள் எதிர் பார்க்கிறார்கள். ஒரு கால் அப்படி நடந்து விட்டால் அவருடைய நம்பிக்கைக்கு பாத்திரமாகி அவருக்கு ஆலோசனை வழங்க பலர் காத்திருப்பார்கள்.

இப்போது விஜயதுங்காவின் முக்கியபணி என்னவென்றால் கட்சிக்கும் நாட்டுக்கும் அவர் பாதுகாவலன், சமரசம் செய்து வைப்பவர் என்ற நிலையில் செயற்பட வேண்டியுள்ளது. அடுத்த அதிபர் தேர்தல் 1994 டிசம்பர் மாதத்தில் நடக்க வேண்டும் அதற்கு முன்பு ஆளும் கட்சியில் இளையதலைமுறை பதவியைப்பிடிக்க வாரிசுப் போராட்டம் நடத்தும் போது கட்சியின் தலைவர் என்ற வகையில் விஜயதுங்கா அதனை எதிர்நோக்க வேண்டியநிலை கட்டாயம்ஏற்படும். அந்த சமயத்தில் அவர் பதவியை விட்டிறங்கி இளைய தலைமுறை போட்டியிட வழி விடலாம் என்றேபொதுவாகக் கருதப்படுகிறது. முதலில் அத்துலத் முதலி அடுத்து பிரேமதாசா என இரண்டு வாரங்களுக்குள் இருவர் படுகொலை செய்யப்பட்டுவிட்ட நிகழ்ச்சியால் இலங்கையே அதிர்ச்சி அடைந்துள்ளது. கொலை ஒரு அரசியல் பழி தீர்க்கும் வழிமுறையாகிவிட்டது. நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டகொந்தளிப்பை சமாளிக்கத் தொடங்கி விட்டோம் என்று அரசுக்கு சிறிதளவு நம்பிக்கை துளிர்விட்ட நேரத்தில் அனைத்தும் துவண்டுபோனது போல கொழும்புக் கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுவிட்டன.எனவே அண்மைய எதிர் காலத்தில் விஜயதுங்கா எப்படி நாட்டை ஆளப்போகிறார் என்பதை அனைவரும் உன்னிப்பாக அவதானித்த வண்ணம் உள்ளனர்.

தற்போது இலங்கையில் காணப்படும் வன்முறை அரசியலுக்கு யார் காரணம்? அரசுக்கு எதிரானவர்களே காரணம் என்று எளிதில் சொல்லி விடலாம்.ஆனால் அதில் அடுத்தடுத்து வந்தஅரசுகளுக்கும் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.சமுதாயத்தில் இதனால் ஏற்பட்டுவிட்ட காயங்களை ஆற்றும் வகையில் முற்றிலும் புதியகொள்கைகள் அண்மைய எதிர்காலத்தில் உருவாக்கப்படும் என்று எதிர்பார்ப்பவர்களுக்குஅதற்கானஅறிகுறிகளே இல்லை என்றுதான்பதிலளிக்க வேண்டியுள்ளது.

தென்புலத்தைச் சேர்ந்த எதிர்க்கட்சிகளிடமிருந்துவிரைவில் தேர்தலை நடத்தக் கோரும் கோரிக்கைகள் வரக் கூடும். அதேபோல அதிபரிடம் மிக அதிக அளவில் அதிகாரக் குவிப்பு உள்ளதால்அவற்றைக் குறைக்கும் வகையில் அரசியலமைப்பு சட்டம் திருத்தப்பட வேண்டுமெனவும் தென்புல எதிர்க்கட்சிகள் கோரக்கூடும். இந்தச் சீர்திருத்தங்கள் எல்லாம் விரைவில்ஏற்படப்போவதில்லை என்றாலும் இவற்றை எதிர்நோக்கும் போது அதிபர் பிரேமதாசா காட்டியஎதிர்ப்பு அணுகு முறையைக் காட்டிலும்,விஜயதுங்காவின் அணுகு முறை சற்றுக்கடுமை குறைவானதாக இருக்கும் என்று நம்பலாம். இதனால் கடந்த சில ஆண்டுகளாக இலங்கை அரசியலைக்கெடுத்துவந்த கொடிய தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சிகள் ஓரளவுக்கு தணியக்கூடும்.

இப்படி அதிபருக்கு அதிபர் அணுகு முறையில் மாற்றம் இருந்தாலும் அரசுப் பணிகளில் முந்திய அரசு தொடங்கியவற்றை தொடர்ந்து அறுந்து போகாமல் பார்த்துக் கொள்வது புதிய அதிபரின் முக்கிய கவலையாக இருக்கும். அமைச்சர் குழுவில் அங்கம் வகிப்போரில் மாற்றம் எதுவும் இல்லை. இருப்பினும் பிரேமதாசாவின் துணைவியார் ஹேமா பிரேமதாசா தன்னுடைய கணவர் வகித்த அதிபர் பதவிக்கு அவரும் வர ஆசைப்படுகிறார் என்று ஒரு கருத்து உண்டு. எது எப்படியாயினும் வெளியுலகிற்கு எல்லாம் எப்போதும் போல் நடப்பதாகத்தான் காட்டிக்கொள்கிறார்கள். விஜயதுங்கா எல்லாம் வழமை போல என்று கூறுவதைப் போல பொருளாதாரச் சீர்திருத்தங்கள் திட்டமிட்டபடி தொடரும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார். நாட்டுடைமைஆக்குவதைஅடியோடு கைவிட்டு பொருளாதாரத்தை முற்றிலுமாக மாற்றியமைக்க பிரேமதாசா முயன்றார். ஆசியாவிலேயே அரச உடைமையை ஒழித்துக் கட்டும் முயற்சியில் இலங்கையின் முயற்சியே பெரியது எனலாம். இதனால் கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கை கண்டுள்ள பொருளாதார வளர்ச்சி நம்பிக்கை ஊட்டுவதாக உள்ளது. இளைஞர்களிடையே வேலைவாய்ப்பு இன்மை என்பது நீண்டகாலமாகவே கவலை தரும் பிரச்சினையாகும். புதிய அரசும் முந்திய அரசைப்போலவே ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறை ஒன்றை உருவாக்குவதன் மூலம் இந்தப் பிரச்சினையை எதிர் கொள்ளக் கருதியுள்ளது. இப்படி இலங்கையில் சமாளிக்கப் பட வேண்டிய பல பிரச்சினைகள் இருந்தாலும் தலையாய பிரச்சினை என்று வடக்கு கிழக்கு பகுதியில் தொடர்ந்து நடைபெறும் போரையே சொல்ல வேண்டும். இதனால் இலங்கையின் பொருளாதாரம் நலிந்து போவதுடன் பல்லாயிரக்கணக்கான மக்களும் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

விஜயதுங்கா அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச விரும்பினார் என்று தகவல்கள் வந்துள்ளன. இது பிரேமதாசா அவர்களும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பல முறை பாடிய பல்லவிதான். எனவே ஒரு கணம் நம்பிக்கை ஊட்டினாலும் மறு கணமே, ஆமா! கேட்டுக்கேட்டு அலுத்துப் போய்விட்ட பாட்டின் எதிரொலி தானே என்றும் எண்ணத் தோன்றுகின்றது. முந்தைய அதிபரைப் போலவே தற்போதைய அதிபரும் சிங்களவர் ஆதிக்கத்தில் இருக்கும் முக்கிய அரசியல் கட்சிகளின் ஒத்த கருத்தை ஏற்படுத்திய பின்னரே புலிகளை அணுகுவது என்ற அணுகுமுறையைப் பின்பற்றுவார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

இதனிடையில் புலிகளுக்கு எதிரானபோரில் மேலும் சுதந்திரமாகச் செயற்படுவதற்கு தனக்கு அதிகாரம் வேண்டும் என்று இராணுவம் நெருக்கத் தொடங்கும். அதிலும் பிரேமதாசா அவர்களின் கொலைக்கு காரணம் இராணுவம் தற்போது கொண்டிருக்கும் சந்தேகத்தை அரசும் உறுதிப் படுத்துமேயானால் இராணுவத்தின் இந்த நெருக்குதல் மேலும் அதிகரிக்கும். ஆனால் இலங்கையில் பலர் வேறு விதமாகத்தான் கருத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு பல சதித்திட்டங்கள் இந்தக் கொலைக்கு காரணமாக இருக்கலாம் என்றே கொழும்பு நகரில் பலர் நம்புகின்றனர். இதனிடையில் நீண்ட கால அளவில் பிரேமதாசா அரசின் பாரம்பரியத்தைக் கட்டிக்காக்கும் வாரிசு யார் என்ற பூசல் தோன்றலாம். அதுகாலை மேலும் வன்செயல்கள் பரவலாம் என்றே பொது மக்கள் அஞ்சுகின்றார்கள்.

பி.பி.சியின் கொழும்பு முகவராக முன்பு பணியாற்றிய கிறிஸ்தோபர் மொறிஸ் 'சிறிலங்காவில் அடுத்ததுஎன்ன?' என்ற தலையங்கத்தின் கீழ் எழுதிய செய்தி ஆய்வுரைக் கண்ணோட்டத்தின் தமிழாக்கம் இது

# காஷ்மீரில் இந்தியப்படை பெண்கள்மீது வன்முறை

## ஏசியாவோச் அமைப்பு குற்றச்சாட்டு

[வாஷிங்டன்]

காஷ்மீரில் இந்திய இராணுவத்தினர் புரியும் மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பான ஏசியா வோச் ...

... நடவடிக்கையை மேற்கொள்ளும்போதும், காஷ்மீர் தீவிரவாதிகள் தாக்கினால் அதற்கு பழிவாங்கும் நோக்கிலும் பெண்கள் மீது இந்தியப்படை ...

... ளிகளைத் தண்டித்துள்ளோம் எனக் குறிப்பிட்டார். வெளிநாடுகளில் இருந்து தீவிரவாதிகளுக்கு ஆயுதம் கிடைப்பதைத் தடுத்தால் இப்படி ...

உற்பத்தி எழுச்சி வாரத்தில்

## கடற்புலிகள் நடத்திய போட்டிகளின் முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

7) கம்பாங்

குத்துதல்:-

1-ம் பரிசு க. இராசலிங்கம் நாகர்கோவில் மேற்கு
2-ம் பரிசு மா. யோசேப் பொலிகண்டி
3-ம் பரிசு இ. சந்திரபாலு நாகர்கோவில் மேற்கு

8) பனைமரம்

12) நிலம்

கொத்துதல்:-

1-ம் பரிசு ம. இராமச்சந்திரன் பொலிகண்டி
2-ம் பரிசு பொ. தங்கவேல் பொலிகண்டி கிழக்கு
3-ம் பரிசு ந. இராசலிங்கம் பொலிகண்டி

13) கட்டுமரம்

வலித்தல் [குடும்பு]

ஆனால், திரு. டி. பி. விஜயதுங்காவோ முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொள்கைகளே கடைப்பிடிக்கப்படும் என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டார். இனப்பிரச்சினை குறித்தும் அவரது அறிவிப்புக்கள் அவ்வாறே உள்ளன.

இந்நிலையில் இனப்பிரச்சினையில் டி.பி.விஜயதுங்காவின் அணுகுமுறை இராணுவத்தீர்வை அண்டியதாகவே இருக்கும் என்பதில் சந்தேகப்பட ஏதுமில்லை ஏனெனில் சிங்களப் பேரினவாதத்தின் இன்றைய வளர்ச்சி நிலையில் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்பதே முடிவாகவுள்ளது.

அரசியல் விமர்சகர்கள் பலரும், கொழும்பில் தங்கியிருந்த தமிழ்க்குழுக்கள் பலவும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவே இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வு காணக்கூடிய சக்தி பொருந்தியவர் எனக் கடந்தகாலத்தில் தெரிவித்தனர். ஆனால், அவர் இனப்பிரச்சினைக்கான தீர்வில் அதாவது இராணுவ அணுகுமுறையில் இருந்து விலகி அரசியல் அணுகுமுறையில் ஒரு படிதானும் முன்னேற முடியவில்லை.

இதேவேளை கடந்த மூன்று வருடத்திற்கு மேற்பட்ட இரண்டாவது ஈழப்போரில் இராணுவத்தீர்வு என்பதுஎப்பொழுதுமேகேள்விக்குரியதாகவில்லை. அரசியல்வாதிகளும் இராணுவத் தலைமையும் அதையே வற்புறுத்தின. அதற்கெனப் பெரும் தயாரிப்புக்கள் நடந்தன. ஆனால் தொடர்ந்து ஏற்பட்ட இராணுவத் தோல்விகளும் அரசியல்வாதிகளின் இழப்புக்களுமே அவர்களின் யாழ். குடாநாட்டின் மீதான பாரிய தாக்குதல்களை இடைநிறுத்திவைத்தனவே ஒழிய அரசியல்வாதிகள் மேற்கொண்ட அரசியல்தீர்வுமுயற்சிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது என்ற நோக்கில் தாக்குதல்கள் இடைநிறுத்தப்பட்டதாகவோ அன்றி கைவிடப்பட்டதாகவோ இல்லை.

திரு. பிரேமதாசா தனது கடைசிக்காலப் பகுதியில் இராணுவச் செலவீட்டிற்கென பெரும் நிதியை ஒதுக்கினார். இராணுவத்திற்கு சலுகைகளை வழங்கினார். தமிழரின் நல்லெண்ண சமிக்கைகளை அவர்கண்டுகொள்ளவில்லை. இராணுவத்தைநவீனப்படுத்தி தமிழரை இராணுரீதியில் தோற்கடிக்க எண்ணினார். இதுவே தனது ஆட்சியை தக்க வைத்துக்கொள்ளும் வழியாக அவருக்கு இருந்தது.

இந்நிலையிலேயே திடீர் அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ளது. இம் மாற்றத்தால் யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பௌத்த பேரினவாதத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியால் விளைந்த சிந்தனைப் போக்கை உடன் தடுத்து நிறுத்திவிட முடியாது. அதுவும் அதே அமைப்பினுள் இருந்து வந்த டி. பி. விஜயதுங்காவால் தடுத்துவிட முடியவே முடியாது.

அவ்வாறு இல்லாமல் பௌத்த பேரினவாதத்தினர் இவ் அணுகுமுறையை தடுத்து நிறுத்துவதானால் டி. பி. விஜயதுங்கா பேரினவாதத்தின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்யும் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். ஆனால் அதற்கு அவரிடம் பலமில்லை. ஆகையினால் டி. பி. விஜயதுங்கா, விரும்பினால் என்ன விரும்பாவிட்டால் என்ன, இராணுவத்தீர்வையே அவரால் நாடிநிற்க முடியும். அதாவது பௌத்த பேரினவாதத்தின் இன்றைய நிலையில் தனிமனித குண நலன்களினால் பெரும் மாற்றங்கள் நிகழும் என எதிர்பார்க்க முடியாது. சிங்கள பேரினவாதம் அனுபவ ரீதியான தோல்வியில் இருந்தே பாடம்பயில முடியும்.

அடுத்த அதிபர் தேர்தல் 1994 டிசம்பர் மாதத்தில் நடக்க வேண்டும் அதற்கு முன்பு ஆளும் கட்சியில் இளையதலை

ளுக்கு அதற்கான அறிகுறிகளே இல்லை என்றுதான்பதிலளிக்க வேண்டியுள்ளது.

தென்புலத்தைச் சேர்ந்த

கம் வகிப்போரில் மாற்றம் எதுவும் இல்லை. இருப்பினும் பிரேமதாசாவின் துணைவியார் ஹேமா பிரேமதாசா

கொல்லப்பட்டு வருகிறார்கள்.

விஜயதுங்கா அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன்

தோன்றலாம். அதுகாலை மேலும் வன்செயல்கள் பரவலாம் என்றே பொது மக்கள் அஞ்சுகின்றார்கள்.

# காஷ்மீரில் இந்தியப்படை பெண்கள்மீது வன்முறை

## ஏசியாவோச் அமைப்பு குற்றச்சாட்டு

[வாஷிங்டன்)

காஷ்மீரில் இந்திய இராணுவத்தினர் புரியும் மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்பான ஏசியாவோச் 19 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில் காஷ்மீரில் இந்தியப் படையினரின், பெண்கள் மீதான வன்முறைகள் குறித்து விபரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் இந்தியப் படையினர் முஸ்லிம் பெண்கள்மீது மேற்கொண்ட 15 பாலியல் வன்முறைச் சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் அநேகமானவை இக்குழுவினர் காஷ்மீரில் தங்கியிருந்த ஒரு வாரத்தில் மட்டும் நடந்தவை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியப்படைகள் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளும்போதும், காஷ்மீர் தீவிரவாதிகள் தாக்கினால் அதற்கு பழிவாங்கும் நோக்கிலும் பெண்கள் மீது இந்தியப்படைகள் வன்முறையைமேற்கொள்வதாக ஏசியா வோச் குறிப்பிடுகின்றது. காஷ்மீரில் இந்திய இராணுவத்தினரின்பெண்கள் மீதான பாலியல் வன்முறை பொதுவான ஒன்றாக இப்போது மாறிவிட்டது என்றும் இதுஅதிகாரிகளாலும் கவனிக்கப்படுவதில்லை என்றும் அந்த அறிக்கையின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏசியா வோச்சின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இந்திய அரசின் உயர் அதிகாரியொருவர் இந்தியப் படைகளின் இத்தகைய மனித உரிமை மீறல் குறித்து நாம் விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டித்துள்ளோம் எனக் குறிப்பிட்டார். வெளிநாடுகளில் இருந்து தீவிரவாதிகளுக்கு ஆயுதம் கிடைப்பதைத் தடுத்தால் இப்படியான மனித உரிமை மீறல் சம்பவங்கள் நடைபெறாது எனக் கூறிய அவ் அதிகாரி முஸ்லிம் தீவிரவாதிகளைத் தூண்டி அவர்களை இப்படியான பொய்யான தகவல்களை வெளியிடவைக்கின்றனர் என்றும் குற்றம் சாட்டினார்.

## இதுவரையில் 68 அவதூறு வழக்குத் தாக்கல்

(சென்னை)

முன்னாள் ஐ. ஏ. எஸ். அதிகாரியான சந்திரலேகா மற்றும் ஏழுபத்திரிகைகள்மீதுமுதல்வர் ஜெயலலிதா அவதூறு வழக்குகளை தாக்கல்செய்துள்ளார். இதன் மூலம் முதல்வர் தாக்கல் செய்திருக்கும் அவதூறு வழக்குகளின் எண்ணிக்கை அறுபத்து எட்டாக உயர்ந்துள்ளது.

## தளபதி மீதான விசாரணை பெரு ஜனாதிபதி ஆதரவாம்

(லீமா)

தமது இராணுவத் தளபதி மீதான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு விசாரணைகள் தொடர்வதற்கு தாம் முழு ஆதரவு அளிப்பதாக பெரு நாட்டின் ஜனாதிபதி அறிவித்துள்ளார். தளபதிமீதான குற்றச்சாட்டுகளில் உறுதியான ஆதாரம் ஏதும் இருப்பதாக தெரியவில்லை எனக் குறிப்பிட்ட அவர்எனினும் முழுமையான விசாரணை பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படும் என உறுதியளித்தார்.

இதேவேளை பெருநாட்டில் பலர் காணாமற் போனதற்கு காரணமானவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு வந்த மற்றுமொரு இராணுவத் தளபதி ஆர்ஜென்டினாவிற்கு தப்பிச் சென்றுவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

## தென்னாபிரிக்காவில் மற்றுமொரு பொஸ்னியா

### ஜனாதிபதி கிளேக் எச்சரிக்கை

தென்னாபிரிக்க வெள்ளையின வலதுசாரி தீவிரவாதிகள், நாட்டை உள்நாட்டுப் போரினால் சீர்குலையும் பொஸ்னியா போன்ற நிலைக்கு கொண்டு வரவே முயற்சிக்கின்றனர் என தென்னாபிரிக்க ஜனாதிபதி டி கிளேக் கண்டனம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளையின கடும் போக்காளர்கள் ஆபிரிக்க வெள்ளையருக்கு தன்னாட்சி கோரும் முகமாக கூட்டு முன்னணியை உருவாக்கினர். இச்செயலைக் கண்டித்தே ஜனாதிபதி கிளேக் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்தார். கறுப்பினத்தவர்களுடனான சமரச பேச்சுகளை குழப்ப முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## மீண்டும் ஆட்சிக்கு வருவோம்

நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறியுள்ளார். சென்னையில் நடைபெற்ற திருமண விழாவில் பேசிய அவர் மேலும் கூறுகையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடியிருப்பது மூலம் இதனை உணர்வதாக தெரிவித்துள்ளார்.

## 8 இலங்கையர்கள் நாகபட்டினத்தில் கைது

(சென்னை)

நாகபட்டினம் பகுதியில் 8 இலங்கையரும், 9 கடத்தல்காரர்களும் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இவர்களிடமிருந்துபெற்றோல் டீசல், ஆட்டோ உதிரிப்பாகங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்தவாரம் கடலோரப் பகுதியில் நடத்திய தேடுதல் நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைதானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

உற்பத்தி எழுச்சி வாரத்தில்

## கடற்புலிகள் நடத்திய போட்டிகளின் முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

**7) கம்பாங் குத்துதல்:-**

1-ம் பரிசு க. இராசலிங்கம் நாகர்கோவில் மேற்கு

2-ம் பரிசு மா. யோசேப் பொலிகண்டி

3-ம் பரிசு இ. சந்திரபாலு நாகர்கோவில் மேற்கு

**8) பனைமரம் ஏறுதல்:-**

1-ம் பரிசு அ. விஞ்சலதாஸ் பொலிகண்டி

2-ம் பரிசு பொ. அழகன் பொலிகண்டி

3-ம் பரிசு யோசேப் ஞான ஜெயராஜ் நாகர்கோவில் கிழக்கு

**9) புதிய உணவு தயாரித்தல்:-**

1-ம் பரிசு பா.விமலாம்பிகை பொலிகண்டி கிழக்கு

2-ம் பரிசு வி. மகாலட்சுமி பொலிகண்டி கிழக்கு

3-ம் பரிசு ர. ரஞ்சனா பொலிகண்டி கிழக்கு

**10) வலைபின்னல்:-**

1-ம் பரிசு சி யோகேந்திரன் பொலிகண்டி கிழக்கு

2-ம் பரிசு யாகப்பு பற்றிமா நாயகி அல்வாய் மேற்கு

**11) பாய்மரம் ஒட்டுதல்:-**

1-ம் பரிசு சி. சுகுணதாஸ் அல்வாய் வடக்கு

2-ம் பரிசு றொசமறி பொலிகண்டி கிழக்கு

3-ம் பரிசு யா. அருள்நேசன் அல்வாய் மேற்கு

**12) நிலம் கொத்துதல்:-**

1-ம் பரிசு ம. இராமச்சந்திரன் பொலிகண்டி

2-ம் பரிசு பொ. தங்கவேல் பொலிகண்டி கிழக்கு

3-ம் பரிசு ந. இராசலிங்கம் பொலிகண்டி

**13) கட்டுமரம் வலித்தல் [துடுப்பு]**

1-ம் பரிசு நா. சிவலிங்கம் நாகர்கோவில் கிழக்கு

2-ம் பரிசு மு. சிவசுந்தரம் நாகர்கோவில் கிழக்கு

3-ம் பரிசு து. கந்தசாமி நாகர்கோவில் மேற்கு

**14) கட்டுமரம் வலித்தல் [சவள்]**

1-ம் பரிசு சி. சுகுணதாஸ் இன்பருட்டி

2-ம் பரிசு தி. சிவாகரன் இன்பருட்டி

3-ம் பரிசு யா. யோசேப் பொலிகண்டி

**15) துலா மிதித்தல்:-**

1-ம் பரிசு கி. சுதாகரன் அல்வாய் மேற்கு

2-ம் பரிசு க. மயில்வாகனம் பொலிகண்டி

3-ம் பரிசு சி. புஸ்பராசா அல்வாய் வடமேற்கு

**16) வண்டிச்சவாரி:-**

1-ம் பரிசு பா. மகேந்திரராசா செம்பியன்பற்று

2-ம் பரிசு க. தவமேனன் நாகர்கோவில் தெற்கு

3-ம் பரிசு க.சிவஸ்கரலிங்கம் குடத்தனை

(முற்றும்)

## மானிப்பாய் பிரிவில் விசர் நாய்த் தடுப்பூசி

மானிப்பாய் சுகாதார பரிசோதகர் பிரிவில் பின்வரும் இடங்களில் இன்று திங்களன்றும், நாளை செவ்வாயும் நாய்களுக்கான விசர் நாய்த் தடுப்பூசி மருந்து ஏற்றுதல் நடைபெறும் என மானிப்பாய் சுகாதார பரிசோதகரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

மத்திய மருந்தகம் மானிப்பாய் மு.ப 9 மணி. வேலக்கை பிள்ளையார் கோவிலடி மு.ப 10மணி, இந்துமகளிர் கல்லூரி அருகாமை மு.ப11 மணி. செல்லமுத்து விளையாட்டு மைதானம் மதியம் 12 மணி. யாழ் அரிசி ஆலை அருகாமை பி.ப 1மணி. மானிப்பாய் கிழக்கு கி சே அலுவலகம் பி.ப 2.30 மணி.

செவ்வாய்க்கிழமை மெமோறியல் பாடசாலை அருகாமை மு.ப 9 மணி, உச்சியோடை வாசிகசாலை மு.ப 10 மணி, திருவள்ளுவர் வாசிகசாலை கட்டுடை மு.ப 11மணி, கட்டுடை சைவப்பிரகாச வித்தியாசாலை மதியம் 12 மணி, கொலனி வாசிகசாலை பி.ப 1மணி ஆகியநேரங்களில் விசர் நாய்த் தடுப்பூசி ஏற்றப்படும்.

ஈழநாதம்

பழநி, ராணிப்பேட்டை தொகுதி

# தேர்தல் ஒத்திவைப்பு; எதிர்க் கட்சிகள் கண்டனம்

(சென்னை)

பழநிமக்களவைத் தொகுதி இடைத்தேர்தல் ஒத்திப் போடப்பட்டிருப்பதை தி. மு. க. மற்றும் அ. இ. அ. தி. மு க. ஆகிய இரு கட்சிகளும் குறை கூறியுள்ளன.

சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் திரு மு. கருணாநிதி பழநி இடைத் தேர்தலை தேர்தல் கமிஷன் ஒத்திப்போட்டிருப்பது நியாய மற்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மே. ஜூன் மாதங்களில் தமிழ்நாடு வரட்சியின் பிடியில் சிக்கியிருக்கும் என்பது தேர்தலுக்காக தேதி குறிப்பதற்கு முன்பே அனைவரும் அறிந்ததே என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை எதிர்கொள்ள விரும்பாத இந்திரா காங்கிரஸ் கட்சிதான் தேர்தலை ஒத்திப்போடுமாறு தேர்தல் கமிஷனைத் தூண்டிவிட்டதாக அ. தி. மு. க வின் துணைப் பொதுச் செயலர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும் பழநி மக்களவைத் தொகுதிக்கும் துணைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டமைக்கு முதல்வர் செல்வி ஜெயலலிதாவே பொறுப்பு என தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. வி. தண்டாயுதபாணி திரு.பி. பொன்னுச்சமி திரு. சி. சுவாமிநாதன் ஆகியோர் சென்னையில் வெளியிட்ட அறிக்கையில் இதைத் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தேர்தல்களை ஒட்டி தமிழக அரசு அதிகார துஸ்பிரயோகம் செய்ததாக கூறப்படுவது குறித்து தேர்தல் கமிஷன் கேட்ட விளக்கத்திற்கு திருப்திகரமான பதில் அளிக்காததே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதற்கு காரணம் என அவர்கள் கூறியுள்ளனர்.

தடுத்துவைக்கப்பட்டோர்

## அகதிமுகாங்களில் இருந்து இல. தமிழர் தப்பி ஓட்டம்

(சென்னை)

காஞ்சிபுரம் சிறை தனிமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து இலங்கைத் தமிழர்கள் நேற்று முன்தினம் பிற்பகல் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டனர். இவர்கள் ஒவ்வொருவராக பின்புற மதிலால் ஏறித் தப்பியதாக கூறப்படுகின்றது.

தமிழ்நாட்டில் பதிவு செய்யாது தங்கியிருந்த இலங்கை தமிழர்கள் இந்த முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். தமிழக சிறப்புப் பொலிஸ் பிரிவு முகாமில் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதுரை மாவட்டம் வேலூர் தனி அகதிமுகாமிலிருந்து நேற்று அதிகாலை சந்திரன், யோகராஜன் ஆகிய இரு இலங்கை அகதிகள் சுவரேறிக் குதித்து தப்பிவிட்டனர்.

இவர்களும் முறையான பயண ஆவணங்கள் இன்றி இருந்ததால் மண்டபம் மற்றும் இராமநாதபுரம் தனி முகாம்களில் ஏற்கனவ கைதுசெய்யப்பட்டவர்கள் என பொலிசார் கூறினர்.

ஓய்வூதியம்

முடியாது இருக்கும் சகல அரச மற்றும் கூட டுத்தாபன ஊழியர்களும் ஜூன் முதலாம்திகதியிலிருந்து இதனைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இதன் விளைவாக 3000 ஊழியர்கள் நன்மையடையவுள்ளனர்.

இதேவேளை தற்போதைய நிதிநெருக்கடிகள் காரணமாக நிலுவைக் கடன் செலுத்தப்படமாட்டாது எனவும் பாதுகாப்பு செலவினங்களுக்காக 2000 கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

உதைபந்தாட்டம்

சுழிபுரம் சத்தியா விளையாட்டுக் கழகம் நடாத்தும் 11 பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இன்று பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

மேற்படி சுற்றுப் போட்டிகளில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பின்வருமாறு:-

பிற்பகல் 3. 30 மணிக்கு அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் எதிர் காரைநகர் சோலையான் விளையாட்டுக் கழகம்.

மாலை 4. 30 மணிக்கு புங்குடுதீவு அம்பாள் விளையாட்டுக்கழகம் எதிர் குருநகர் யாழ்பாரதி விளையாட்டுக் கழகம். (41)

## சடலம் மீட்பு

பருத்தித்துறை முனைப்பகுதியில் உள்ள மாடி வீடொன்றில் இருந்து கழுத்தில் சுருக்கிட்டு இறந்த நிலையில் குடும்பத் தலைவர் ஒருவரின் சடலம் ஒன்று பருத்தித்துறை காவல்துறையினரால் நேற்று மீட்கப்பட்டது.

முனையைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி (வயது 35) என்பவரே இவ்வாறு இறந்து காணப்பட்டவராவர்

காவல்துறையினரால் இச் சடலம் மந்திகை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு காவல்துறையினரும், திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. நடராசாவும், மேல் விசாரணைகளை மேற்கொண்டனர். (யோ)

## முக்கிய மருந்து வகைகள் வைத்திய சாலையில் இல்லை

(தென்மராட்சி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் முக்கியமானமருந்து வகைகள் இல்லாமையால் வெளிநோயாளர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

குறிப்பாக தொய்வு நோய்க்கு முக்கியமான குளிகைகளும் மற்றும் விற்றமின் குளிகைகளும் அங்கு இல்லை என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

## புதுக்கோட்டை மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை

புதுக்கோட்டை மாவட்ட ஜெகதாபட்டின கடலோர வாழ் மீனவர்கள் எதிர்வரும் 8 நாட்களுக்கு கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி முதல் இப்பகுதி கடலில் கடற்படையும் பொலிஸ ரும் இணைந்து தீவிர சோதனை நடவடிக்வதையடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போட்டி

மருதனார்மடம் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் சுன்னா

# சிறிமாவின் குடியுரிமை பறிப்பை அன்று எதிர்த்தேன்

## காமினி திசாநாயக்கா

]கொழும்பு]

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியலுரிமையைப் பறிக்க வேண்டாம் எனநான்எவ்வளவோ வாதாடினேன். இதற்காக நான்மூன்று மணி நேரம் பேசினேன். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரைப் பயங்கர வாதிகளாக்க வேண்டாம் என்று நான் எடுத்துக் கூறினேன் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உபதலைவர் காமினி திசாநாயக்கா தெரிவித்தார்.

தென்மாகாண சபைக்கான தேர்தலில் காலி மாவட்டத்தில் போட்டியிடும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய காமினி திசாநாயக்கா மேலும் கூறுகையில் இதற்காக எல்லாம் ஜே. ஆர் ஜெயவர்த்தனா மனஸ்தாபம் அடையவில்லை.

அரசியல்வாதிகள் அன்று விட்ட பிழைகளினால் தான் இன்று வடக்கில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அன்று அவர்கள் வடபகுதியின் நலனில் அக்கறை கொள்ளவில்லை. அலட்சியப் போக்குடன் செயற்பட்டனர். வடபகுதி மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றத் தவறியதால்தான் இன்று அங்குபிரச்சினைகள் முற்றி வெடித்து உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு

## செய்தியாளருக்கு எதிராக தொண்டமான் போர்க்கொடி

நாட்டில் இப்போது நிலவும் நிலைமை குறித்து தவறான தகவல்களை வெளியிடும் வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு எதிராக அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான் கோரிக்கை விடுத்துள்ளார்.

தனிநபர் ஒருவர் பிரச்சினையை உருவாக்க நாம் அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டு நாட்டில் வன்முறையைக் கிளறிவிடும் நோக்கில் செயற்படும் வெளிநாட்டவர்களை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றிவிடவேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

வதிவிட வேளாண்மை உற்பத்தி

## எழுச்சி வாரப் போட்டி பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

வடமராட்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தினரால் மற்கொள்ளப்பட்ட வதிவிட வேளாண்மை/உற்பத்தி எழுச்சிவாரப் போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா கோட்ட இணைப்பாளர் திரு. வே. பூங்குன்றன் தலைமையில் இன்று திங்கட்கிழமை இரவு 7. 30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

வடமராட்சி தளபதி திரு. அருணா, கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. சிறிநிவாசன் ஆகியோர் மங்கள விளக்கு ஏற்றிவைப்பர்.

சிறப்பு விருந்தினர்களாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்ட இணைப்பாளர் திரு. ந. அருள்நேசன், வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் திரு. பா. பைந்தமிழன், யாழ். மாவட்ட கடற்புலி தமிழீழ பொண்மிய மேம்பாட்டுக்கழக இணைப்பாளர் திரு. சங்கிலியன், வடமாட்சி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

## வடபகுதி உப்பளங்களை மூடிவிட முடிவாம்

வடபகுதி உப்பளங்களின் ஊழியர்கள் 1993 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன் இளைப்பாறலாம் என உப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதே வேளை 1992 ஆம் ஆண்டுக்குரிய12மாத சம்பளம் மட்டுமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட பகுதியில் உள்ள உப்புக் கூட்டுத்தாபனங்களை வெளிநாட்டு கம்பனி ஒன்றும் விலைக்கு வாங்க முன்வராமையினாலேயே மேற்படி நிலை தோன்றியிருப்பதாகவும் இராணுவ நடவடிக்கை காரணமாக இக் கூட்டுத்தாபனம் இயங்காமல் இருப்பதால் தனியார் மயப்படுத்த முடியாமல் இருப்பதாலும் தொடர்ந்து நிறுவனத்தை நடத்த முடியாது என உப்புக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## அடையாளம் காட்டிப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற் பரப்பின் ஊடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட பயணப்பை ஒன்றைக் கிளாலிக் கடற்கரையில் இருந்து திருடர் ஒருவர் திருடிச்சென்றுவிட்டார். இப் பயணப்பையைத் தமிழீழக் காவல்துறையினர் தற்பொழுது மீட்டெடுத்துள்ளனர்.

இப்பையினுள் லண்டனில் இருந்து ஜே அன்ரன் என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட அஸ்வினி என்ற பெண்ணின் பிறந்த தின வீடியோ கசற் ஒன்றும், மேலும் பல பொருள்களும் உள்ளன. உரியவர்கள் சாவகச்சேரி காவல் துறைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

எறிகணை

நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு கடும் எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

இதேவேளை கடலில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்ட வண்ணம் இருந்தன. எனினும் சேதவிபரம் தெரியவில்லை இதேவேளை படகுச் சேவைஇடையூறு இன்றிஇடம் பெற்றது. [86]

பிற்பகல் அங்கிருந்து தப்பிச்

### ஓய்வூதியம்

முடியாது இருக்கும் சகல அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களும் ஜூன் முதலாம்திகதியிலிருந்து இதனைப் பெற்றுக் கொள்ளவுள்ளனர்.

இதன் விளைவாக 3000 ஊழியர்கள் நன்மையடையவுள்ளனர்.

இதேவேளை தற்போதைய நிதிநெருக்கடிகள் காரணமாக நிலுவைக் கடன் செலுத்தப்படமாட்டாது எனவும் பாதுகாப்பு செலவினங்களுக்காக 2000 கோடிரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

யாது தங்கியிருந்த இலங்கை தமிழர்கள் இந்த முகாமில் வைக்கப்பட்டிருந்தனர். தமிழக சிறப்புப் பொலிஸ் பிரிவு முகாமில் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மதுரை மாவட்டம் வேலூர் தனி அகதிமுகாமிலிருந்து நேற்று அதிகாலை சந்திரன், யோகராஜன் ஆகிய இரு இலங்கை அகதிகள் சுவரேறிக் குதித்து தப்பிவிட்டனர்.

இவர்களும் முறையான பயண ஆவணங்கள் இன்றி இருந்ததால் மண்டபம்மற்றும் இராமநாதபுரம் தனி முகாம்களில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டவர்கள் என பொலிசார் கூறினர்.

(தென்மராட்சி)

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் முக்கியமானமருந்துவகைகள் இல்லாமையால் வெளிநோயாளர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள்.

குறிப்பாக தொய்வு நோய்க்கு முக்கியமான குளிசைகளும் மற்றும் விற்றமின் குளிகைகளும் அங்கு இல்லை என வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதனால் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

## புதுக்கோட்டை மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை

புதுக்கோட்டை மாவட்ட ஜெகதாபட்டின கடலோர வாழ் மீனவர்கள் எதிர்வரும் 8 நாட்களுக்கு கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி முதல் இப்பகுதி கடலில் கடற்படையும் பொலிஸ ரும் இணைந்து தீவிர சோதனை நடவடிக்கையை மேற்கொண்டு வருவதையடுத்தே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### போட்டி

மருதனார்மடம் கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் இன்றும் நாளையும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (41)

### கடற்படை

தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரின் நடவடிக்கை அதிகரிப்பினால் மீனவத்தொழில் பாதிப்படைந்து வருகிறது இதேவேளை மீனின் விலையும் அதிகரித்துள்ளது. [யோ

### பாதுகாப்பு

விளங்குகின்றார். ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சரவையில் பிரதமராக இருந்த விஜயதுங்கா பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பொறுப்பையும் வகித்தமை தெரிந்ததே.

### வீட்டில்

என்றும், ஆனால் தூதுவராலயத்தில் விசாவுக்கு ஏற்பட்ட தாமதத்தினால் கொழும்பில் இருக்கவேண்டி ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இவ்இளைஞனின் குடும்பத்தினைச் சேர்ந்த அங்கத்தினர் மிரட்டல் காரணமாக விசாவழங்கப்படும் தூதுவராலய பாதுகாப்பில் இருப்பதாக மேலும் வினி எத்திகொடை தெரிவித்தார்.

### லலித்தை

சம்பவத்தில் தொடர்புடையவர் என கூறி ஒரு தலையின் படத்தை பிரசுரித்துள்ளனர். இவர்தான் கொலை செய்தார் என்பதற்கு எதுவித ஆதாரமும் இல்லை. இத் தலை ஒரு பொது மகனுடையதாகக்கூட இருக்கலாம்.

லலித், பிரேமதாசா கொலைகளை ஒரே நபர் செய்தால்றிச்சார்ட்டிசொய்சா ரஞ்சன் விஜபரட்ண, கிளான்சி பர்ணான்டோ கொலைகளைச் செய்தவர் யார்?

ஏனையோரின் கொலை குறித்த விசாரணைகள் வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டது. விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்க் கட்சிகள் கேட்ட போதுதட்டிக்கழிக்கப்பட்டது கொப்பேகடுவவின் மனைவி விசாரணை கோரிய போது கூட நடத்தப்படவில்லை.

ஆனால் அத்துலத்முதலி கொல்லப்பட்டதும் ஜனாதிபதி பிரேமதாசா வெளிநாட்டு விசாரணையாளரை அழைத்தார் ஏன அவசரப்பட்டார்? என அவர் மேலும் கூறினார்.

யடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்

வடமராட்சி தளபதி திரு. அருணா, கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. சிறிநிவாசன் ஆகியோர் மங்களவியன், வடமராட்சி பெரும்பாக உத்தியோகத்தர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (யோ)

## வடபகுதி உப்பளங்களை மூடிவிட முடிவாம்

வடபகுதி உப்பளங்களின் ஊழியர்கள் 1993 ஆம் ஆண்டு ஜனவரிக்கு முன் இளைப்பாறலாம் என உப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதே வேளை 1992 ஆம் ஆண்டுக்குரிய12மாத சம்பளம் மட்டுமே வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட பகுதியில் உள்ள உப்புக் கூட்டுத்தாபனங்களை வெளிநாட்டு கம்பனி ஒன்றும் விலைக்கு வாங்க முன்வராமையினாலேயே மேற்படி நிலை தோன்றியிருப்பதாகவும் இராணுவ நடவடிக்கை காரணமாக இக் கூட்டுத்தாபனம் இயங்காமல் இருப்பதால் தனியார் மயப்படுத்த முடியாமல் இருப்பதாலும் தொடர்ந்து நிறுவனத்தை நடத்த முடியாது என உப்புக் கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இருந்து ஜே அன்ரன் என்பவரால் அனுப்பிவைக்கப்பட்ட அஸ்வினி என்ற பெண்ணின் பிறந்த தின வீடியோ கசற் ஒன்றும், மேலும் பல பொருள்களும் உள்ளன. உரியவர்கள் சாவகச்சேரி காவல் துறைப் பணிமனையில் பெற்றுக் கொள்ளமுடியும்.

### எறிகணை

நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு கடும் எறிகணைத் தாக்குதலை நடாத்தினர்.

இதேவேளை கடலில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் கேட்ட வண்ணம் இருந்தன. எனினும் சேதவிபரம் தெரியவில்லை இதேவேளை படகுச் சேவைஇடையூறு இன்றிஇடம் பெற்றது. [86]

## மரண அறிவித்தல்கள்

### ஐயாத்துரை ஜெயராசா

(ஜேர்மனி)

ஐயாத்துரை ஜெயராசா 28. 4. 93இல் ஜேர்மனியில் காலமானார். அன்னார் சிறுவிளான் இளவாலையை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் சுப்பிரமணியம் ஐயாத்துரை (ஓய்வுபெற்ற கல்வித் திணைக்கள ஊழியர்) தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், நாகலட்சுமி திருக்கோணமலை நாகராசா [வ.பி.போ.ச (காப்பாளர்) காரைநகர்] ஜெயலட்சுமி, சவுந்தரராசா (ஜேர்மனி) புஸ்பராசா (உதைபந்தாட்ட பயிற்றுநர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவானந்தம் (சுங்கப்பகுதி இலாகா பிரதம லிகிதர் திருக்கோணமலை) புவனேஸ்வரி கோதண்டபாணி (அ.ம.பல நோ.கூ.ச. முகாமையாளர்) சியாமினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:-
ஐயாத்துரை நாகராசா
(சகோதரன்)

கச்சாய் றோட்,
கொடிகாமம்.

[சி-6598]

### பிரம்மஸ்ரீ நீலகண்டக் குருக்கள் சச்சிதானந்தீஸ்வரக் குருக்கள்

(ஆதீன கர்த்தர் வெள்ளெருவைப் பிள்ளையார்கோயில் கோப்பாய்)

பிரம்மஸ்ரீ நீலகண்டக்குருக்கள் சச்சிதானந்தீஸ்வரக் குருக்கள் (இளைப்பாறிய ஆசிரியர் அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி) 9- 5- 93 ஞாயிற்றுக்கிழமை காலை 9.45 மணியளவில் காலமாகிவிட்டார். அன்னார் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-5-93 மாலை கோப்பாய் மயானத்தில் நடைபெற்றது என்பதனை அறியத் தருகிறோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். அன்பர்கள் யாவரும் ஏற்றுக கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

வெள்ளெருவை
பிள்ளையார் கோவில்,
கோப்பாய் வடச்கு,
கோப்பாய்.

(4842)

## உள் வந்தவெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 09-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9353

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

21-2511, 24-5121, 41-5668, 26-3638, 27-1141
24-5721, 24-4367, 27-6769, 24-5955, 26-3177
26-5576, 26-7540, 42-1750.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

41-5015, 41-9038, 28-9917, 26 1724, 24 0336
24 4393, 26 3633, 27-5822, 24-2493, 26-3654
24-0917, 26-4443, 27 9756, 42-1722, 24-5590
24-5119, 22-3615, 41-1531, 26-6026, 24-8467
42-3368


மகளிருக்கான டிப்ளோமா

'மனைப்பொருளியலும், கைத்திறனும்'

பயிற்சிகள்

★ கேக் ஐசிங் ★ கைவேலை ★ பூவேலை
★ உணவுகள் தயாரித்தல்

❁ தையல் பயிற்சி
(குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகலவிதமான உடைகள் தைத்தல், பூவேலைப் பாடுகள் செய்தல்)

மேற்படி பயிற்சிகள் பயிலும் மாணவிகளுக்கு –
இலவச கூந்தல் அலங்காரம், கோலம் வகுப்புகளும் நடைபெறும்.
பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

★ பயிற்சியின் முடிவில் அங்கீகரிக்கப்பட்ட தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
★ கிழமைநாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய். புதன் ஆகிய நாட்களில் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறும்.
★ சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9 00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை நடைபெறும்.

புதிய சனி, ஞாயிறு பிரிவுகள்
ஆரம்பம்: 16-05-1993

புதிய கிழமை நாள் பிரிவுகள்
ஆரம்பம்: 17-05-1993

கலாலயா
[பல் பயிற்சியகம்]

விக்டோரியா வீதி,
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]
யாழ். நகர்.

(சி-6594)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 10 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.